# குறுந்தொகையில் குறிஞ்சித் திணைக் கோட்பாடு

***முனைவர் இர. ரேச்சல் மேனகா***
தமிழ்த்துறைத் தலைவர்
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிப்பட்டி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958643

### முன்னுரை

தமிழ் தொன்மையான இலக்கிய, இலக்கணங்களைக் கொண்ட செம்மையான மொழி, பண்பட்டது, வரலாற்றுச் சிறப்புடையது, எப்போது தோன்றியது என்று யாராலும் கூறமுடியாத அளவு பழமையானது எனலாம். பிற நாட்டினர்ர் நாகரசுக நிலையை எட்டாத காலத்தில் தமிழில் இலக்கியங்கள் வளரத் தொடங்கின. தமிழ் மக்களின் வாழ்வை சித்தரிப்பவனவாக சங்க இலக்கியங்கள் உள்ளன. சங்க இலக்கியங்கள் எனப்படுபவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் தொகுப்பாகும். அவற்றுள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை குறிஞ்சித்திணை பாடல்களில் அகப்பொருள் இலக்கணம் கூறும் கருப்பொருள் எங்ஙனம் எடுத்தாளப்பட்டுள்ளது என்ற பாங்கினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### கருப்பொருள்

**“விறல்சேய், பொருப்பன், வெற்பன், சிலம்பன்,
குறத்தி, கொடிச்சி, குறவர், கானவர்,
குறத்தி, கிளி, மயில், மறப்புலி, குடாவடி,
கறையடி, சீயம், சிறுகுடி, அருவி,
நறுஞ்சுனை, வேங்கை, குறிஞ்சி, காந்தள்,
ஆரம், தேக்கு, அகில், அசோகம், நாகம்,
வேரல், ஐவனம், தோரை, ஏனல்,
கறங்கிசைத் தொண்டகம், குறிஞ்சியாழ், குறிஞ்சி,
வெறிகோள், ஐவனம் வித்தல், செறிகுரல்
பைந்தினை காத்தல், செந்தேன் அழித்தல்,
செழுங்கிழங்கு அகழ்தல், முழங்கி வீழ் அருவியொடு
கொழுஞ்சுனை ஆடல் குறிஞ்சிக் கருப்பொருளே”[1]**

| | | |
|---|---|---|
| தெய்வம் | - | முருகன் சேய் |
| உயர்ந்தோர் | - | வெற்பன், கொடிச்சி, சிலம்பன் |
| தாழ்ந்தோர் | - | குறவர், கானவர், குறத்தி |
| புள் | - | கிளி, மயில் |

விலங்கு - புலி, கரடி, யானை, சிங்கம்
ஊர் - சிறுகுடி
நீர் - அருவி நீர், சுனைநீர்
பூ - வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தள் பூ
மரம் - சந்தனம், தேக்கு, மூங்கில், அசோகு
உணவு - மலைநெல், மூங்கிலரிசி, தினை
பறை - தொண்டகப்பறை
யாழ் - குறிஞ்சியாழ்
பண் - குறிஞ்சிப்பண்
தொழில் - வெறியாடல், தினை காத்தல், தேனெடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல், மலைநெல் விதைத்தல்

என்ற பதினான்கு கருப்பொருட்களும் குறுந்தொகைக்குறியனவாகும். இந்த பதினான்கு கோட்பாடுகளும் குறுந்தொகைப் பாடல்களில் கையாளப்பட்டுள்ளதைக் காண்போம்.

**குறுந்தொகையில் கருப்பொருள்**

**குறுந்தொகையில் தெய்வம்**

குறிஞ்சித்திணைத் தெய்வமாக அகப்பொருள் இலக்கணம் கூறுவது முருகன். முருகனுக்குப் பல பெயர்கள் உண்டு. வேலன், கந்தன், தமிழ்க் கடவுள், முருகன் எனப் பல பெயர்களை உடைய தெய்வம். இத்தெய்வத்தை குறுந்தொகையிலுள்ள குறிஞ்சிப் பாடல் எங்ஙனம் கூறியுள்ளது என்பதைக் காணலாம்.

**"மென்தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்**
**வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்**
**அது என உணரும் ஆயின், ஆயிடைக்**
**கூழை இரும்பிடிக் கைக்கரந் தன்ன**
**கேழ்இருந் துறுகல் கெழுமலை நாடன்**
**வல்லே வருக - தோழி - நம்**
**இல்லோர் பெருநகை காணிய சிறிதே"[2]**

தீன்மதி நாகன் பாடிய பாடலிலும், 360வது குறுந்தொகைப் பாடலிலும் வேலன் என்ற சொல் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. குறுந்தொகை 1வது பாடலிலும் செய்யோன் என்பதன் பொருளாகக் கையாளப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**குறுந்தொகையில் மக்கள்**

குறிஞ்சித்திணைக்குரிய மக்களாக வெற்பன், கொடிச்சி, சிலம்பன், குறவன், கானவர், குறத்தி ஆகியன கூறப்பட்டுள்ளன. அவை குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**"மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய**
**பிறங்குகுரல் இறடி காக்கும், புறம்தாழ்**
**அம்சில் ஓதி, அசை இயல், கொடிச்சி**
**திருந்து இழை அல்குற்குப் பெருந்தழை உதவிச்**
**செயலை முழுமுதல் ஒதிய, அயலது**
**அரலை மாலை சூட்டி,**
**ஏமுற்றன்று - இவ் அழுங்கல் ஊரே"[3]**

கூடலூர்கிழார் எழுதிய குறுந்தொகைப் பாடலில் கொடிச்சி என்ற மக்கள் பெயர் இடம்பெற்றுள்ளது. கொடிச்சி என்ற பெயர் குறுந்தொகையில் *272, 286, 291* ஆகிய பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. அதேபோல் குறமகள் என்ற சொல் குறுந்தொகை *214, 346, 394* ஆகிய பாடல்களில் இடம்பெற்றுள்ளது. சிலம்பன் என்ற பெயர் குறுந்தொகை *362*வது பாடலிலும், வெற்பன், குறவன், குறத்தியர், கொடிச்சி, கானவர், கானவன் போன்ற பெயர்கள் *252, 257, 265, 272, 286, 291, 322, 333, 335, 342, 353, 357, 360, 362, 373, 374, 379, 385* ஆகிய குறுந்தொகைப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

**குறுந்தொகையில் ஊர்**

குறிஞ்சித் திணைக்குரிய ஊராக சிறுகுடி கூறப்பட்டுள்ளது. இத்தகைய ஊர் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**"நிலம்புடை பெயரினும், நீர் திரிந்து பிறழினும்,**
**இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்,**
**வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்**
**கேடு எவன் உடைத்தோ - தோழி! நீடுமயிர்க்**
**கடும்பல் ஊகக் கறைவிரல் ஏற்றை**
**புடைத் தொடுபு உடையுப் புநாறு பலவுக்கனி**
**காந்தள் அம் சிறுகுடிக் கமழும்**

***ஓங்குமலை நாடனொடு அமைந்தநம் தொடர்பே”[4]***

மதுரைக் கொல்லன் புல்லன் என்ற புலவரால் பாடப்பட்ட பாடலில் சிறுகுடி என்ற ஊர்ப்பெயர் இடம்பெற்றுள்ளது. மேலும், *373, 332, 355, 95* போன்ற பாடல்களிலும் சிறுகுடி என்ற பெயர் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

## குறுந்தொகையில் நீர் :

அருவி நீர், சுனைநீர் ஆகியன குறிஞ்சித் திணைக்குரிய நீர்வளமாகும். இவை குறுந்தொகைப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பாங்கினைக் காணலாம்.

***“காமம் ஒழிவது ஆயினும் - யாமத்துக்***
***கருவி மாமழை வீழ்ந்தென, அருவி***
***விடரகத்து இயம்பும் நாட! - எம்***
***தொடர்பும் தேயுமோ நின்வயினானே?”[5]***

என்ற கபிலர் பாடலிலும்,

***“புல்வீழ் இற்றிக் இல் இவர் வெளசுவேர்***
***வரைஇழி அருவியின் தோன்றும் நாடன்***
***தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்***
***வந்தன்று - வாழி, தோழி! - நாமும்***
***நெய்பெய் தீயின் எதிர்கொண்டு,***
***தான் மணந்தனையம் என விடுகம் தூதே”[6]***

என்ற பாடலிலும், *371, 259, 286, 315, 353, 170, 96, 372* போன்ற பாடல்களிலும் அருவி என்ற பெயர் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

## குறுந்தொகையில் உணவு

குறிஞ்சித் திணையின் உணவாக மலைநெல், மூங்கிலரிசி, தினை ஆகியன கூறப்பட்டுள்ளன. இவை குறுந்தொகையில்,

***“அம்ம வாழி, தோழி இன்று அவர்***
***வாரார் ஆயினோ நன்றே - சாரல்***
***சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து***
***இரவு அரிவாரின், தொண்டகச் சிறுபறை***
***பானாள் யாமத்தும் கறங்கும்,***
***யாமம் காவலர் அவியா மாறே”[7]***

என்ற பாடலில் சிறுதினை என்ற உணவுப்பெயர் கூறப்பட்டுள்ளது. மேலும், *392, 394, 357, 225, 205* போன்ற பாடல்களிலும் தினை பற்றிக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

## குறுந்தொகையில் தொழில்

குறிஞ்சித்திணைக்குரிய தொழில்களாக வெறியாடல், தினை காத்தல், தேனெடுத்தல், அருவி நீராடல், மலைநெல் விதைத்தல் போன்றன கூறப்பட்டுள்ளன.

இவை குறுந்தொகையில் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பதைக் காணலாம்.

***“அம்ம வாழி, தோழி இன்று அவர்***
***வாரார் ஆயினோ நன்றே - சாரல்***
***சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து***
***இரவு அரிவாரின், தொண்டகச் சிறுபறை***
***பானாள் யாமத்தும் கறங்கும்,***
***யாமம் காவலர் அவியா மாறே”[8]***

என்ற பாடலில் இரவில் ஊர்க்காவல் புரியும் தொழில் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும், குறுந்தொகை 54வது பாடலிலும் தினைப்புனக் காவல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

குறிஞ்சித் திணையிலுள்ள முதற்பொருளான நிலமும் பொழுதும் பற்றிய செய்திகள் குறுந்தொகையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை புலவர்களின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறதாக அமைந்தது. கருப்பொருளாககுறிஞ்சித்திணைதரும் கோட்பாடுகள் பதினான்கும் குறுந்தொகையில் பல பாடல்களில் புலவர்களால் எடுத்தியம்பி இருப்பது தனித்துவம் மிக்கவையாகவும், அவை அக்கோட்பாடுகளோடு பொருந்தியனவாகவும் இருப்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. மேலும் உரிப்பொருள் கோட்பாடான புணர்தல் பற்றிய பாடல்களும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. மொத்தத்தில் குறிஞ்சித்திணையின் கோட்பாடுகளான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் குறுந்தொகைப் பாடல்களில் பெரும்பாலும் பொருத்தமுடையதாக பயன்படுத்தப்பட்டுள்ளதை இக்கட்டுரை வழி உணர முடிகிறது.

**அடிக்குறிப்பு**

1. அகம். நூ. 20 பக்.10
2. குறுந். பா. 111 பக்.269
3. குறுந். பா. 214 பக்.493
4. குறுந். பா. 373 பக்.891
5. குறுந். பா. 42 பக்.113
6. குறுந். பா. 106 பக்.256
7. குறுந். பா. 375 பக். 876
8. குறுந். பா. 375 பக். 876

**துணை நூற்பட்டியல்**

1. சங்க இலக்கியம் குறுந்தொகை மூலமும் உரையும் பாகம்-2, உரையாசிரியர் : முனைவர். வி.நாகராசன், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. சங்க இலக்கியம் குறுந்தொகை மூலமும் உரையும் பாகம்-1, உரையாசிரியர் : முனைவர். வி.நாகராசன், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. அகப்பொருள் விளக்கம், முனைவர். இரா.சுமதி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.